

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாமை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான்,துணை சேர்மன் ஜெயபாலன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர் உள்ளனர்.

### செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில்

# 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

செஞ்சி செப். 11-

நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சிறப்புரை.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில்உள்ள ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,சத்திய மங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

ஆலோசனை கூட்டத்தில் முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

உலகமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்து வருகிறார் .அந்த வகையில் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின்போன்ற உன்னதமான திட்டங்களை அறிவித்து ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் வரும் 13 ஆம்தேதி செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறுகிறது. இந்த முகாமில்

பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம் ,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை, மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட உள்ளது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யவும் மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும்,

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள் முகாமில் வழங்கப்பட உள்ளது என அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் உன்னத திட்டமான நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில்பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றிய கவுன்சிலர்கள், உள்ளிட்டதுறை சார்ந்த அதிகாரிகள்மக்களிடம் தெரிவித்து முகாமில் கலந்து கொண்டு அவர்கள் பயன்பெறுவதற்கு தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் அவர் கேட்டுக்கொண்டார்..

கூட்டத்தில் ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் ,சத்தியமங்கலம் மருத்துவர்பிரதிபா, ஒட்டம்பட்டு மருத்துவர் முகிலன்,வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சசிகலா,காஞ்சனா,அபிராமி, சுரேஷ் ராமதாஸ் கங்காதரன்சுகாதார ஆய்வாளர் முரளி,ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி செயலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தர பாண்டியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை, செப். 11 -

நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் ப. செல்வம் தலைமையில் இன்று (11.9.2025) மாலை 4.30 மணிக்கு நடைபெறுகிறது. கூட்டத்தில் நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. கழக முப்பெரும் விழா

2. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் படி, உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் வழிகாட்டுதலின்படி, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒன்றியம், சிறுபாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது, இதில் நகர மன்ற துணைத்தலைவர் வைத்தியநாதன், ஒன்றிய குழுத்தலைவர் ராஜவேல், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர்கள் பிரியா பாண்டியன், அமுதா சாமி பிள்ளை, ராஜேஸ்வரி ராஜா, ஊராட்சி மன்ற தலைவர்கள் ரேகா அருள், அமுதா, ஞானவேல், ஒன்றிய குழு உறுப்பினர் ரஜினி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள், பொதுமக்கள் மற்றும் கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர், மேலும் இம்முகாமில் கோரிக்கை மனுக்கள் கொடுக்க வந்த பொது மக்களுக்கு பசிக்கு உணவளித்து, தாகத்துக்கு தண்ணீர் கொடுத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள், கோரிக்கை மனுக்கள் கொடுக்க வந்த பொது மக்களுக்கு மதிய உணவு அளித்து, நலத்திட்ட உதவிகள் வழங்கிய தமிழக முதல்வருக்கும், துணை முதல்வருக்கும் பொதுமக்கள் சார்பில் நெஞ்சார நன்றிகளை தெரிவித்து கொண்டனர்.

# குறள் படிப்போம்... குரல் கொடுப்போம்.

திருக்குறள் திருப்பணிகள் திட்டம்.

இந்தியாவின் வரலாறு நாட்டின் தென்முனையில் இருந்து எழுதப்பட வேண்டும் என்றார் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்கள்.

அதற்கு அச்சாரமாகத்தான் வான்புகழ் வள்ளுவரின் வானுயரச் சிலையை தென்முனையில் இருந்து வடக்கு நோக்கி பார்க்குமாறு அமைத்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

2000- ஆம் ஆண்டில் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலைக்கு 2024 -ஆம் ஆண்டில் வெள்ளி விழாவைக் கொண்டாடியது தமிழ்நாடு அரசு.

31. 12. 2024- அன்று கன்னியாகுமரியில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்...

"ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி, மாவட்டந்தோறும் தொடர் பயிலரங்குகள்/ பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். திருக்குறள் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற திட்டம் வகுக்கப்படும். இதற்காக ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றிற்கு மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்"

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பின் வாயிலாக தமிழ்நாடு முழுவதிலும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக செயல்படுத்தப்படும் குறள் பரிசுத் திட்டத்தில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு பொதுமக்களிடையேதிருக்குறள்குறித்தவிழிப்புணர்வு மேம்படுத்திடவும் வாய்ப்பாக அமையப்பெறும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மேற்கொள்ளப் பெரும் திருக்குறள் திருப்பணிகளுக்கென தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஆண்டுதோறும் ரூபாய் மூன்று இலட்சம் வழங்கப் பெறலாம் என்றும், இத்திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்திட ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழு நியமிக்கலாம் என்றும், இக்குழு வாயிலாக மாவட்டத்தில் உள்ள தமிழ் அமைப்புகளில் உள்ள திருக்குறள் ஆர்வலர்கள் மூன்று குழுக்களாக தேர்வு செய்து, அதன் வாயிலாக இளைஞர்கள், பொதுமக்களுக்கு ஒரு வாரத்தில் அரை நாள் வீரம் ஒரு குழு 30 வாரங்கள் திருக்குறள் பயிற்சி வகுப்புகள்/ பயிலரங்குகள் நடத்தலாம் என்றும், மூன்று குழுக்களும் சேர்ந்து மொத்தம் 90 நிகழ்ச்சிகள் நடத்தலாம் என்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இதன் செயல்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு அரசாணை(நிலை) எண்: 72 ,தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.2)த் துறை,நாள்: 28.0 4 .2025-படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

வானத்தையும் வசப்படுத்தும் ஆற்றல் வள்ளுவரின் வரிகளுக்கு உள்ளது என்பதை நன்கு உணர்ந்த நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கும் இந்த திருக்குறள் திருப்பணிகள் திட்டம் என்பது தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் வாழ்வின் உயர்வுக்கும் வழி வகுக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை .

இப்போது தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டிருக்கிறது இத்திட்டம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அக்குழுவிலிருந்து திருக்குறள் பயிற்சிகளைக் கொடுக்க ஆர்வமுள்ள மூன்று நபர்கள் வாயிலாக மூன்று குழுக்கள் மூலம் பயிற்சி வகுப்புகள்,பயிலரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கூடுதலாக திருக்குறள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படும் என்பது உறுதி.

தமிழ் வளர்ச்சித் துறை ஏற்கனவே நடத்தி வரும் திருக்குறள் பரிசுத் திட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கைக் கூடும் என்பதும் உறுதி.

வள்ளுவமே வாழ்வை மேம்படுத்தும் கருவி

அதற்காக ...திருக்குறள் விழிப்புணர்வுக்காக அனைவரும் குரல் கொடுப்போம் குறள் படித்திட .

குறள் படிப்போம்...

குரல் கொடுப்போம்.

**கவிஞர் பேரா என்ற பே.இராஜேந்திரன்**
உறுப்பினர்,
திருக்குறள் திருப்பணிகள் திட்ட
கண்காணிப்புக் குழு,
திருநெல்வேலி.



# தேனி வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. அறிக்கை!



தேனி, செப். 11-

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன்.எம்.பி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09-09-2025 அன்று காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி தேனி வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நாளை (12.09.2025- வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணியளவில் தேனி என்.ஆர்.டி மகாலில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள்,பாக முகவர்கள் (BLA 2) பாக கமிட்டி உறுப்பினர்கள் (BLC) பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA),உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்செல்வன். எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருள் :

1.செப்டம்பர் 17 -ல் கரூரில் நடைபெறும் முப்பெரும்விழாவில் கலந்து கொள்வது தொடர்பாக,

2. செப்டம்பர் 15 - பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் மண், மொழி, மானம் காக்க உறுதி மொழி ஏற்பது - தொடர்பாக

3.செப்டம்பர் 20 -ல் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம். - தொடர்பாக

4. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக,

5. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன். எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

#### சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு, விழுப்புரம் மத்திய ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - ம. ஜான் வல்தாரிஸ் 11, பெரியார் நகர், அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. செந்தில்குமார் 5/78, பிச்சம்பாளையம், சக்தி தியேட்டர் ரோடு, திருப்பூர் - 641603. 2) ச. தாரிக் முகமது 6/112, மங்கலம் ரோடு, திருப்பூர் - 641654. 3) சா. மகிழவன் 3/143, சி.எஸ்.ஐ. வீதி, கருவலூர், அவிநாசி - 641670, திருப்பூர் மாவட்டம். 4) எம். முஷாபர் அகமது 1/1180, அழில் நகர், நெரிப்பெரிச்சல், திருப்பூர் - 641666. 5) ஜெ. பிரவீன் ஜோசப்ராஜ் 186ஏ, சி.எஸ்.ஐ. வீதி, பெருமாநல்லூர், திருப்பூர் - 641666.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - **கே.ஆர்.சபியுல்லா,** நகராட்சி பாடசாலை, வடக்கு வீதி, சத்தி.

துணைத் தலைவர் - எஸ்.பி. முஜிபுல்லா, 38. நகராட்சி பள்ளி வடக்கு வீதி-1 சத்தியமங்கலம். ஈரோடு மாவட்டம்

அமைப்பாளர் - சி.ராஜேந்திரன், 1/83, சி.எஸ்.ஐ.தெரு கடுக்காம்பாளையம்(அ), கோபி.

துணை அமைப்பாளர்கள் - 1) அ.நாசர், 214, முல்லை நகர், நல்லூர் அஞ்சல், புளியம்பட்டி. 2) மு.தஸ்தகீர், 7, அம்மன்நகர், நல்லகவுண்டன்பாளையம், லக்கம்பட்டி, கோபி. 3) ஜி.எஸ்.தீலிப், 33, சாரதா மாரியம்மன் கோவில் தெரு, கோபிசெட்டிபாளையம். 4) எஸ்.யாகூப், புஞ்சைதுறையாம்பாளையம், பங்களாபுதூர், டி.என். பாளையம். 5) ஞா.அசோக் மேசாக், 4/559, கவிதா நகர், எஸ்.பி.நகர் அருகில், கோபிசெட்டிபாளையம்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - **எஸ். தாகீர்** 26, ஏரிக்கரை தெரு, ஆர்.ஆர். நகர், விழுப்புரம்.

துணைத் தலைவர் - பி. தோமினிக் 21/1, சேவியர் தெரு, விழுப்புரம்.

அமைப்பாளர் - டி.என்.ஏ. தமின் 2, பாண்டி - விழுப்புரம் மெயின் ரோடு, நவமால்காப்பேர், தென்னல் அஞ்சல், கண்டமங்கலம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.ஆர்.எஸ். அசாருதீன் 49, வ.உ.சி. தெரு, விழுப்புரம். 2) அ. அன்வர்பாஷா 4, குத்துவாபு தெரு, கோட்டக்குப்பம், வானூர் வட்டம். 3) நா. ஹென்றிதாஸ் 456, அன்னை இந்திரா நகர், திருச்சிற்றம்பலம் கூட்ரோடு, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

4) எஸ்.கே.எஸ். முகமது அலி 38/14, கைவல்லியர் தெரு, விழுப்புரம். 5) எஸ். லூக்காஸ் செங்காடு கிராமம், விழுப்புரம் வட்டம். 6) எம்.ஏ. ஷாருக் அகமது 33, முகமதியார் தெரு, மந்தக்கரை, விழுப்புரம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 09-09-2025.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி, துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி திருமானூர் மத்திய ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் போக்குவரத்துத் துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டலின் படி திருமானூர் ஒன்றிய கழக செயலாளர் இரா.கென்னடி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் வளவனூர் ப.அன்பரசு ஆலோசனைகளை வழங்கினார். மத்திய ஒன்றிய மேற்பார்வையாளர் ஏ டி எஸ் சரவணகுமார், கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.ஜி.எஸ்.முருகன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் சி. சந்திரசேகரன், லதாபாலு உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.